விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 12 சனிக்கிழமை (26.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## நாடாளுமன்ற விவாதத்திற்கு முன்பாகவே ரெலிக்கொம் பங்குகள் விற்கப்பட்டு விட்டன

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம்மின் பங்குகள் விற்பனை தொடர்பான நாடாளுமன்ற விவாதம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதன் பங்குகள் 40 ரூபாவினால் அதிகரித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நிதி அமைச்சிடமிருந்து ரெலிக்கொம்மின் பங்குகளைக் கொள்வனவு செய்யும் குளோபல் தொலைத் தொடர்பு நிறுவனம் (06 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் சம்பவத்தையடுத்து கடற்றொழிலுக்கு மீண்டும் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், குருநகர், கொழும்புத்துறை, பாசையூர் மற்றும் தீவகப் பகுதியில் மறுஅறிவித்தல் வரை கடற்றொழிலுக்குப் படையினர் தடை விதித்திருப்பதாக மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நெடுந்தீவுப் பகுதியில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலையடுத்தே இத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. யாழ்.கரையோரப் பகுதி மீனவர்களையும் தீவகப் பகுதி மீனவர்களையும் குடாக் கடலிலும் தீவகக் கடற்பகுதியிலும் மீன்பிடிப்பதற்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் படையினர் அறிவித்துள்ளனர்.

படையினரின் திடீர் அறிவிப்பால் தொழிலுக்குச் சென்ற மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் பல கடலில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

# அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சு மூலம் தீர்வை ஏற்படுத்த வேண்டும்

## விடுதலைப்புலிகளின் வாகனம் கிளைமோரில் சிக்கியது

(மன்னார்)

மன்னார் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான வள்ளம்குளத்திற்கும் பள்ளமடுவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பயணித்துக் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் வாகனம் ஒன்று கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இத் தாக்குதலில் விடுதலைப் (06 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தல்

(வாஷிங்டன்)

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. எனவே அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை அமைதியானதாக அமைய ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசும் - விடுதலைப்புலிகளும் பேச்சுமூலமான ஓர் அரசியல் தீர்வுக்கு வரவேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது. அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்கள உதவிப் பேச்சாளர் டொம் ஹசி இக் கருத்துக்களை நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வெடித்ததில் சிப்பாய் உயிரிழப்பு

சங்கானையில் படைச் சிப்பாய் ஒருவரின் கைக்குண்டு தவறுதலாக வெடித்ததில் அவர் பலியானதாகச் செய்திகள் தெரிவித்தன.

இதன்போது மற்றொரு சிப்பாயும் படுகாயமடைந்துள்ளார். சங்கானைப் பகுதியில் உள்ள காவலரண் ஒன்றில் நேற்றுக் காலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படுகாயமடைந்த சிப்பாய் சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சமாதானச் செயலகப் பணிப்பாளர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்

சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகமும் வெளிவிவகார அமைச்சின் செயலாளருமான கலாநிதி பாலித கோஹன்ன நேற்று மட்டக்களப்புக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு பல தரப்பினரையும் சந்தித்து ஆலோசனையும் நடாத்தினார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் [illegible] காணிப்பாளர்கள், சிவில் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் என பல தரப்பினரையும் அவர் சந்தித்து உரையாடினார்.

இதன்போது இடம்பெயர்ந்திருக்கின்ற மக்களின் மீள்குடியேற்றம், அவர்களுக்கான நிவாரண உதவிகள், அபிவிருத்தி, பாதுகாப்பு [illegible]

## இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை கோருவதற்கு எந்தவிதத் தடையுமில்லை என மேலதிக பெரும்போக பயிர்ச்செய்கை அபிவிருத்தி அமைச்சர் தர்மதாஸ [illegible] லை என அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் முன்வைத்த ஒத்திவைப்பு விவாதத்தின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்புக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு பல தரப்பினரையும் சந்தித்து ஆலோசனையும் நடாத்தினார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சமய, சமூகப் பிரமுகர்கள், ஐ.நா.அமைப்புக்களின் பிரதிநிதிகள், போர்நிறுத்தக் கண்

இதன்போது இடம்பெயர்ந்திருக்கின்ற மக்களின் மீள்குடியேற்றம், அவர்களுக்கான நிவாரண உதவிகள், அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அவர் கேட்டறிந்தாகக் கூறப்படுகின்றது. (ச-3)

ஜா உரிமை கோருவதற்கு எந்தவிதத் தடையுமில்லை என மேலதிக பெரும்போக பயிர்ச் செய்கை அபிவிருத்தி அமைச்சர் தர்மதாஸ பண்டா தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகள் எந்த நேரமும் நாட்டிற்குத் திரும்பி வர எவ்விதத் தடையுமில்

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் முன்வைத்த ஒத்திவைப்பு விவாதத்தின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் அகதி முகாம்களில் உள்ள சுமார் 28 ஆயிரத்து 500 பேருக்கு இலங்கைப் பிரஜா (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஓமந்தையில் திருப்பப்பட்டார்

(கொழும்பு)

வவுனியா ஓமந்தையூடாகக் கொழும்பு செல்வதற்காகச் சென்ற கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

வழமையாக இவ்வாறு சோதனைச் சாவடிகள் மூடப்பட்ட நிலையிலும் அரச அவசர வேலைகள் நிமித்தம் கொழும்பு செல்லும் அரசாங்க அதிபர் இம்முறை படையினரால் எதுவித காரணங்களுமின்றி உடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## எத்தனை மிக் விமானங்களை வாங்கினாலும் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாது

### புதிய இடதுசாரி முன்னணி அறிக்கை

(கொழும்பு)

எத்தனை மிக் விமானங்களைக் கொள்வனவு செய்தாலும் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாது. இந்த நாட்டில் அமைதி நிலவ வேண்டுமானால் யுத்தம் நிறுத்தப்பட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை உடன் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என புதிய இடதுசாரி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர அமைதியை விரும்புகின்றவர்கள் தமிழ்த் தேசியத்தை அங்கீகரிப்பதுடன் அவர்களுக்கான சுயாட்சியும் வழங்கப்படல் வேண்டும். இதை ஆட்சியாளர் அங்கீகரித்தால் போர் விமானங்களுக்காகப் பெருந் தொகைப் பணத்தை விரயமாக்கத் தேவையில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விமானப் படையினருக்குப் பயிற்சிகளை வழங்குதல், புதிய (06 ஆம் பக்கம் பார்க்க)

## சகல வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கும் தற்காலிக நியமனம் வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள சகல வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கும் தற்காலிக இணைப்பை வழங்குமாறு 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா எழுத்து மூலமாக அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக வெளி மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் பணிக்குச் செல்ல முடியாத நிலையில் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ளனர்.

இந் நிலையில் போக்குவரத்துப் பிரச்சினைகள் சீராகும் வரை அவ் ஆசிரியர்களுக்கு அவர்கள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்தினால் உயிரிழப்புக்களைத் தடுக்க முடியும்

### பிரிட்டன் நம்பிக்கை

(லண்டன்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த வருடம் இடம்பெற்ற வன்செயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட மூன்று லட்சம் மக்களுக்கு உதவுவதற்கென பிரிட்டன் 210 மில்லியன் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

தொடரும் வன்செயல்கள் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். சகல தரப்பினரும் வன்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய சுமுகநிலையை ஏற்படுத்த முன்வர வேண்டும் என பிரிட்டன் சர்வதேச அபிவிருத்திக்கான (06 ஆம் பக்கம் பார்க்க)

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவினுள் பிறப்பு,விவாகம்,இறப்பு ஆகிய பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாதிருப்போருக்கான நடமாடும் சேவை ஒன்றினை நடாத்தி காலம் கடந்த பதிவினை மேற்கொண்டு உரிய ஆவணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப் பதிவினை மேற்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக தமது பிரிவு கிராம சேவை உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு பெயர் விபரங்களை பதிவு செய்யுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் புதிய ஆதாரங்கள் கண்டுபிடிப்பு

(பசாடினா)

சிவப்புக்கிரகம் என்று அழைக்கப்படும் செவ்வாய்க்கிரக ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா நிறுவனம் தீவிரம்காட்டி வருகிறது. சூரியனில் இருந்து 22.56 கோடி கி.மீ.தூரத்திலிருக்கும் செவ்வாய்கிரகத்தில் தண்ணீர் இருப்பதாக ஏற்கனவே சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இந்த நிலையில் நாசா நிறுவனம் அனுப்பிய ஸ்பிரிட் என்ற விண்கலம் புதிய தகவல்களை பூமிக்கு அனுப்பியுள்ளது. இதில் செவ்வாய்க்கிரகத்தில் முன்பு தெரிவிக்கப்பட்டதை விட அதிகளவு தண்ணீர் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குசேவ் பள்ளம் என்று அழைக்கப்படும் பகுதியில் அதிகளவு சிலிக்கா படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் அதிகளவு இருந்தால் மட்டுமே இந்த சிலிக்கா படிவங்கள் இருக்க வாய்ப்புள்ளது.

இது தவிர கந்தகம்,தாதுக்கள்,எரிமலைகளும் செவ்வாய்கிரகத்தில் இருப்பதாக ஸ்பிரிட் விண்கலம் ஆதாரங்களை அனுப்பியுள்ளது. 2004 ஆம் ஆண்டு இந்த விண்கலம் அனுப்பப்பட்டது. (ச-5)

# முதியோர் அடையாள அட்டை

சமூகசேவை திணைக்களத்தால் வழங்கப்படும் முதியோர் அடையாள அட்டையை வைத்திருப்பவர்கள் சுகாதார சேவைகள், போக்குவரத்து வசதிகள்,தபாலும் ஓய்வூதியமும் ,வங்கிச்சேவைகள்,பொலிஸ் நீதி ஆலோசனைகள்,அரச அலுவலகங்கள் ஆகியவற்றின் சேவைகளைப் பெறுவதில் முன்னுரிமை பெற உரித்துடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 வயதும்,அதற்கு மேற்பட்டோர்களுக்கும் பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவை அலுவலர்கள் மூலம் விண்ணப்பத்தைப்பெற்று இவ் அடையாள அட்டையை பெறமுடியும் என வலிகாமம் கிழக்கு சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தெரிவித்துள்ளார். (அ)

# தேசிய மட்ட தமிழ்த்தினப்போட்டிகளில் பங்குபெறும் மாணவர்களுக்கு பயண ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

2006 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்களுக்கான பயண ஏற்பாடுகள் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் எஸ்.பிரதீபன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் யூன் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள இப் போட்டிகளுக்கான அனுமதிப்பதிவு யூன் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் இதற்காக எதிர்வரும் 4 ஆம் திகதி கப்பலில் செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட செயலகம் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே செல்லவுள்ள மாணவர்கள் மற்றும் வழிகாட்டல் ஆசிரியர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி பயண ஏற்பாடுகளுடன் மாவட்ட செயலகத்திற்கு வருகை தருமாறு திட்டப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை 2006 ஆம் ஆண்டு தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து கலந்துகொள்ளவுள்ள மாணவர்களின் பெயர்களை கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவு உதவிப் பணிப்பாளர் பெ.இராசையா அறிவித்துள்ளார்.

அவர்களின் விபரம் வருமாறு,

ஆக்கத்திறன் வெளிப்பாடு: செல்வன் ஆனந்தராசா ஹரிசங்கர் (யா/.கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை), பேச்சு: செல்வி க.சரணிகா (யா/. இந்து ஆரம்ப பாடசாலை), பாவோதல்: செல்வி ஜெ.வைஷ்ணவி (யா/.மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), நடனம்: செல்வி பா.ஜஸ்திகா (யா/இராமநாதன் கல்லூரி), செல்வி ஜெ.பிரியவதனி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), செல்வி பா.அபிராமி (யா/இராமநாதன் கல்லூரி),

நாட்டிய நாடகம் (யா/இராமநாதன் கல்லூரி,மாணவிகள் குழு)-செல்வி எஸ். சோபிகா,எஸ்.றோமியா, ம.வாசுகி,சி.ஷியாமளா, எ.கனிதீபா,சி.சிவதாரணி,ஜெ.கஸ்தூரி, நி.சர்மிளா, அனித்தா,இ.கேதுஷா, வில்லுப்பாட்டு (யூனியன் கல்லூரி)-செல்வன் கு.குணறோஜன்,இ.தனுஷன், கு.சங்கர், பா.கிறதீப், க.நிசாந்தன்,சி.பிரிசாந், அ.சண்முகப்பிரியன்,விவாதம்(யா/மத்திய கல்லூரி)பரமலிங்கம் தர்சானந்த்,சண்முகம் சொலமன், சந்திரகுமார் கோபிநாத். (ச-5)

# விக்கிபீடியா இணையத்தளத்தில் இராணுவ இரகசியங்கள் அம்பலம்

## ஜெயசேகர எம்.பி.விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி இராணுவ இரகசியங்களை விடுதலைப்புலிகளுக்கு வெளியிடுவது என்பது தவறானது நாம் அதனை வெளியிடவில்லை. ஆனால் விக்கிபீடியா இணையத்தளத்தில் படையினரின் போரிடும் திறன் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளுக்கு படையினர் தொடர்பான இரகசியங்களை ஐக்கிய தேசியக்கட்சி வழங்கி வருகின்றது என்று எரிபொருள் மின்சக்தி பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்த குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கையிலேயே ஜெயசேகர இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; அரசினால் எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படவுள்ள படையினரின் ஆயுதங்கள் தொடர்பான பட்டியலும் விக்கிபீடியா இணையத்தளத்தில் உள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு மிக்-29 வானூர்திகளை கொள்வனவு செய்கின்றோம் என கூறிக்கொண்டு அரசு பொதுமக்களின் பணத்தை தவறாக பயன்படுத்துகின்றது. இது 2007 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவை 200 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது.

ஐக்கிய தேசியகட்சி மீது இலகுவாக சேறடிக்க வேண்டாம். தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் கொள்ளை நடைபெறுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு அரசு 200 மில்லியன் ரூபாய்களை வழங்கியது தொடர்பான விவாதத்திற்கு தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என சிறீபதி சூரியாராட்சியினால் முன்வைக்கப்பட்ட யோசனை தடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர். (ச-5)

# இந்துக்களுக்கு பிரிட்டிஷ் அரசு புகழாரம்

(லண்டன்)

பிரிட்டனில் வாழும் இந்துக்களும் அவர்களது தொண்டு நிறுவனங்களும் ஆங்கிலேய சமுதாயத்துக்கு ஆற்றிவரும் பணிகள் பாராட்டத்தக்கவை என்று பிரிட்டிஷ் அரசு கூறியுள்ளது. லண்டனில் ஸ்டான் மூரில் உள்ள சுவாமி நாராயண் ஹிந்து கோயிலில். இந்து எய்ட் தொண்டு நிறுவன மாநாடு வியாழக்கிழமை நடைபெற்றது.

இம் மாநாட்டில் கலந்துகொண்ட சர்வதேச மேம்பாட்டுக்கான பிரிட்டிஷ் இணை அமைச்சர் ஹிலாரி பென் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியதாவது, மனித சமுதாயத்தின் நலனுக்காக 'இந்து அமைப்புக்கள் பாடுபடுகின்றன. அனைவரும் சமம் என்பதே இந்த அமைப்பின் நோக்கமாக இருக்கிறது.உலக அளவில் ஏழ்மையை ஒழிப்பதே இந்து எய்ட் அமைப்பின் இலட்சியமாக இருக்கின்றது.

'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற பகவத் கீதையின் அறி வுரையை நாம் அனைவரும் எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். இந்த மாநாடு பிரிட்டனில் வாழும் இந்து சமுதாயத்தினருக்கு மிக முக்கியமானதொன்று என்று இந்து எய்ட் அமைப்பின் தலைவர் அர்ஜன் வேகாரியா கூறினார்.

சர்வதேச மேம்பாடு,வறுமை ஒழிப்பு, கல்வி உள்ளிட்ட பணிகளுக்கு பிரிட்டனில் வாழும் இந்துக்கள் அளித்துள்ள பங்களிப்பை எடுத்துக்காட்டும் வகையில் இம் மாநாடு அமைந்திருந்ததாக அவர் மேலும் கூறினார்.

இம் மாநாட்டில் பல்வேறு மத நம்பிக்கையுள்ள அமைப்புக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ச-5)

# பரமேஸ்வரக்குருக்களின் மறைவிற்கு அமைச்சர் டக்ளஸ் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மிகவும் புகழ்பூத்த அந்தண சிவாச்சாரியார் நயினை சுவாமிநாதர் பரமேஸ்வரக் குருக்களின் மறைவு அந்தணப் பெருமக்களையும் சைவ மக்களையும் ஏற்றுக்கொள்ள முடியாத மிகவும் கவலை தரும் செய்தியாகும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஸ்ரீ வித்தியா சர்வதேச இந்துமத குருபீடம் மூலம் குருகுலக் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் செயலாற்றிய அந்தண சிவாச்சாரியார் நயினை சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் இப் பணிகள் மூலம் என்னுடன் அறிமுகமானவர். அவர் மதிப்பிற்குரிய இந்துமத குருக்கள் என்பதுடன் அவரது குருத்துவ சேவையை நயினாதீவுடன் மட்டுப்படுத்தாமல் சைவமக்கள் வாழும் உலக நாடுகள் அனைத்திலும் பரவுவதற்கும் வழிசெய்துள்ளார்.

குருக்கள் ஐயாவின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கும்,உறவினருக்கும் எனது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன். (சு)

# ஒப்பந்தத்தை அமுல்படுத்துமாறு அகாஷி இரு தரப்பையும் வலியுறுத்துவார்

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து நடக்குமாறும் அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் யப்பானின் சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி வலியுறுத்துவார் என இராஜதந்திரத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,இரு தரப்புக்குமிடையிலான மோதல்கள் அதிகரித்து பதற்றமான சூழல் தோன்றியுள்ள நிலையிலேயே யப்பானின் சமாதானத்தூதுவர் யசூசி அகாஷியின் இலங்கைக்கான விஜயம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

[illegible] மாத நடுப்பகுதியில் அகாஷி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதும் விஜயம் தொடர்பான சரியான திகதியை யப்பான் தூதரகம் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

இலங்கை வரும் அகாஷி ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் மட்ட தலைவர்களை சந்தித்துப்பேசவுள்ளார். மேலும் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் தலைவர்களையும் சந்திக்கத்திட்டமிட்டுள்ளார். எனினும் அகாஷியின் கிளிநொச்சிக்கான விஜயம் குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு சென்றால் கிளிநொச்சியில் புலிகளின் தரப்பில் யாருடன் பேச்சு நடத்துவது என்பது குறித்தும் தீர்மானிக்கப்படவில்லை என கொழும்பிலுள்ள யப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச-5)

# நான்கு மாவட்டங்களில் இதுவரையும் 683 பேர் செங்கண்மாரியால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அண்மைக்காலமாக பரவி வரும் ஈரல் அலட்சி (செங்கண்மாரி) நோயினால் இதுவரை சுமார் 683 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந் நோயைத் தடுப்பதற்கு சுகாதார அமைச்சினூடாக அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவப் பிரிவுக்கான பணிப்பாளர் நாயகம் பி.ஜே.மஹிபால தெரிவித்தார்.

கடந்த ஓரிரு மாதத்திற்குள் இனங்காணப்பட்டுள்ள செங்கண்மாரி நோய் தொடர்பாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அறிவூட்டும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுக் காலை சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பகுதியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். பணிப்பாளர் இது குறித்து மேலும் குறிப்பிட்டதாவது; செங்கண்மாரி நோயினால் இதுவரை சுமார் 683 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஒருவரே இது வரையில் உயிரிழந்துள்ளார்.

இந் நோய் கூடுதலாக கம்பளை,கண்டி , நுவரேலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களிலேயே பரவுகிறது. கம்பளைப் பகுதியிலேயெ இதன் தாக்கம் அதிகமாகவுள்ளதாக தகவல் பெறப்பட்டுள்ளது.

இம் மாதம் 21 ஆம் திகதி நூறு நோயாளர்களும் 22 ஆம் திகதி 82 நோயாளர்களும் 24 ஆம் திகதி 50 நோயாளர்களும் கம்பளை போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்துள்ளனர்.

இந்நோய் அசுத்தநீர் பாவனையினாலேயே அதிகம் பரவுகின்றது. தற்போது பெறப்பட்டுள்ள புதிய தகவல்களின்படி இந் நோய் பரவும் வேகம் குறைந்து வருவதாக அறிய முடிகிறது.

அந் நோயாளர்களுக்கான கம்பளை வைத்தியசாலையில் தனியான சிகிச்சைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலைக்கு இந் நோய் குறித்த விசேட வைத்திய நிபுணர் அனுப்பிவைக்கப் பட்டுள்ளார்.சுகாதார அதிகாரிகள் அனைவரும் செங்கண்மாரி நோய் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 120 சுகாதார ஊழியர்கள் நோய் பரவியுள்ள பகுதிகளில் பணியாற்றி வருகின்றனர்.

இந் நோய் பரவும் பிரதேசங்களுக்கு சுத்தமான நீரை பெற்றுக்கொடுப்பதற்கான அனைத்து வழிகளையும் செய்துள்ளோம். அதனுடன் தொடர்புபடும் சகல அரச நிறுவனங்களுக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளோம்.

மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிட்டு அவை அப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இவற்றை சுகாதார அமைச்சு, மாகாணசபையின் சுகாதாரப் பிரிவு மற்றும் பிரதேச சபை சுகாதார ஊழியர்கள் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

வீடுவீடாகச் சென்று மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சிகள் அடுத்தமாதம் பூராகவும் நடத்தத்திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 10.30 மணிக்கு பி.சங்கர் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (அ)

# அங்கவீனர்களுக்கான வீட்டுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சு அங்கவீனர்களுக்கான வீடமைப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது. 18 வயதிற்கும் 70 வயதிற்கும் இடைப்பட்ட மாத வருமானம் ஆறு ஆயிரம் ரூபாவிற்கு குறைந்த வீட்டுக் காணி உரித்துள்ள அங்கவீனர் ஒருவர் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

தகுதிவாய்ந்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலரிடம் அல்லது தமது கிராம அலுவலரிடம் தொடர்பு கொள்ளுமாறு வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் சி.எ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (அ)



# தரிசனம்

சரிநிகர்

# பிரச்சினைக்குத் தீர்வு

## வரலாற்றை பின்நகர்த்தியதன் விளைவு

ந.கந்தசாமி
(மனித உரிமை செயற்பாட்டாளர், மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்)

இலங்கையின் இனப்பிரச்சினை ஆயுத மோதலாக உருவெடுக்க ஆரம்பித்த காலப்பகுதியான 1979 இன் பிற்பட்ட காலப் பகுதியில் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அக்கலந்துரையாடல்களில் முக்கியமான பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் சமய சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் .கலந்து கொண்டனர். இவர்கள் எல்லோ



ருமே சுய நிர்ணய உரிமை மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற முடிவுக்கு வந்திருந்தனர். அதற்காகச் செயற்படவும் முன் வந்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையின் அரசியல் எதிர்த் திசையில் சென்றுவிட்டது. சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று சொன்னவர்களுடைய கட்சிகள் எல்லாம் வரலாற்றைப் பின்னோக்கி இழுத்து இன்று கிராம இராஜ்ஜியத்தில் வந்து நிற்கின்றன.

விளைவு தமிழ் மக்கள் மட்டுமல்ல முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் என ஏராளமான மக்கள் கொல்லப்பட்டதோடு இலட்சக்கணக்கானோர் தமது வாழ்விடங்களை விட்டு இடம் பெயரவும் நேரிட்டது. அந் தந்த மக்களுடைய தனித்துவமான கலாசார கூறுகளும் அழிக்கப்பட்டன.

இன்று திரும்பிப்பார்க்கும் போது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்குமாயின் இவ்வளவு அழிவுகளும் ஏற்பட்டிருக்காது. இன்றும் கூட காலம் கடந்துவிடவில்லை. சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இப்பிரச்சினையை தீர்ப்பது பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது. 'இந்தப் பிரச்சினை உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும். இல்லையேல் வெளியக் சுயநிர்ணய உரிமையைப்பயன்படுத்தவேண்டிய நிலைக்கு தமிழர்கள் தள்ளப்படுவார்கள் ' என்று சுயநிர்ணய உரிமை இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற நூலின் அதன் ஆசிரியர் ஹெலனா வோல் குறிப்பிடுவது நிதர்சனமாவது தடுக்கமுடியாது போய்விடும்.

## பெருண்மையை ஏற்க வேண்டும்

எம்.எம்.எம்.நூறுல்ஹக்
(ஊடகவியலாளர் பன்னூலாசிரியர்)

நமது நாட்டின் பெரும்பான்மை சமூக சிங்கள மக்களின் பெரும் பகுதியினர்களும் சிங்கள மக்களில் இருந்து காலத்திற்குக்காலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசாங்கங்களும் சிங்கள பௌத்த மேலாட்சிச் சிந்தனையின் கெடுபிடிகளை அடுத்த சமூகத்தினர்களான தமிழ், முஸ்லிம் மக்கள் மீது திணிக்கும் கடும் போக்கை ஒரு சர்வசாதாரண செயற்பாடாக நீண்ட காலம் தொட்டுக் கடைப்பிடித்து வருகின்றனர்.

சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே இலங்கை தாயக பூமி எனும் எண்ணக்கருவும் அதற்கேற்ற உறுதியான தொழிற்பாடுகளும் தான் நமது நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையின் ஆணி வேராகும். இதனால்தான் இந்நாட்டின் இன்னும் இரு பூர்வீக குடிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் சமூகங்களில் இருந்து வெளிப்படும் சுய நிர்ணய உரிமைப் போராட்டங்களை பயங்கரவாத நகர்வென்றும் இனத்துவேச போக்கு என்றும் சித்திரித்து நியாயபூர்வமான போராட்டங்களை மழுங்கடித்து விடுகின்ற இயல்பை சிங்கள பௌத்த பெரும்பான்மை பேரினவாதம் கொண்டிருக்கின்றது.

அதேநேரம் தமிழ் பேரினவாதம் முஸ்லிம் சமூகத்தினை அடிமைப்படுத்துவதிலும் நசுக்குவதிலும் குறியாகக் கொண்டு செயற்படுகின்றது. பொதுவாக பேரினவாத மனோநிலை வலிமைப்படும் பாங்குகளும் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டு முற்றாக களைந்தெறியப்படல் வேண்டும். சிங்கள ,தமிழ் , முஸ்லிம் எனும் மூன்று சமூகத்தினர்களுக்கும் இந்நாட்டின் சில பகுதிகள் தாயக பூமியாக இருக்கின்றது எனும் பேருண்மையை ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு சமூத்தினர்களுக்கான உரிமைகளும் தனித்துவங்களும் மதிக்கப்படும். 'சுய நிர்ணய உரிமையை ' அங்கீகரிப்பதை வலியுறுத்தும் வகையிலான அதிகாரப் பரவலாக்கல், அதிகாரப் பகிர்வு மூலமே நமது நாட்டில் நீண்ட காலமாக இருப்புக் கொண்டுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர சமாதான தீர்வை ஏற்படுத்த முடியும்.

## சரியான அர்த்தப்படுத்தல் தேவை

மா.மங்களேஸ்வரி சங்கர்
(சட்டத்தரணி)

'அனைத்து மக்களும் தமது அரசியல் அந்தஸ்து , தமக்கான பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான சுய நிர்ணய உரிமையைக் கொண்டுள்ளனர்.' 'அரசியல் மற்றும் குடியியல் உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கை பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கை' சுயநிர்ணய உரிமை என்பது மனித உரிமைகள் சட்டக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. மக்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தமது அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக தீர்மானிப்பதற்கும் தமது பொருளாதார சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியை சுதந்திரமாக முன்னெடுப் பதற்கான உரிமை கொண்டவர்கள் என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பட்டயம் தெளிவாகக் கூறுகின்றது.

சுய நிர்ணய உரிமையைக் கோருவதற்கு,

☞ சுதந்திரக் கோரிக்கைக்கான வரலாறு.

☞ எல்லையிடப்பட்ட நிலப்பரப்பை சுயமாக ஆட்சி செய்தல்.

☞ குறிப்பான அல்லது தனியான கலாசாரம் அல்லது மொழி.

☞ சுய ஆட்சியை மீளப்பெறுவதற்கான விருப்பும் தகுதியும்.

போன்ற தேவைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

சர்வதேச நீதிமன்றம், சுய நிர்ணய உரிமையானது அரசாங்கங்கள் தனித்துக்கொண்டிருக்கும் உரிமை என்பதிலும் பார்க்க மக்கள் கொண்டிருக்கும் உரிமை என்பதையே வலியுறுத்துகின்றது. சுய நிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான இலங்கை தமிழர்களின் வரலாற்றை எடுத்துநோக்கினால் காலனித்துவ ஆட்சிக்கு முன்பதாக வடகிழக்கில் தமிழ் மன்னர்களது ஆட்சி பற்றிய வரலாறுண்டு.

போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப்பகுதியை கைப்பற்றிய போது (முழுமையாக அல்ல) 1621ல் மன்னன் சங்கிலியனை கொலை செய்தமை இதற்கு சான்றாகும் .இதன் பின்னர் ஒல்லாந்தர் இத் தீவைப் பொறுப்பேற்று ஒரு நிலையற்ற ஆட்சி நடத்தினர். இவர்களிடம் இருந்து கைப்பற்றிய பிரித்தானியராலேயே ஒற்றையாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இருவேறுபட்ட சமூகங்களுக்கிடையில் ஒற்றையாட்சி முறை பற்றி, கரின் பாக்கர் 'சுய நிர்ணய உரிமையை விளங்கிக்கொள்ளல்'



எனும் கட்டுரையில் 'ஒற்றையாட்சி முறை என்னும் கட்டாய திருமணம்' எனக் கூறுகிறார்.

காலனித்துவத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் ஒற்றையாட்சி நாடாக இருப்பதற்கான கருத்து முரண்பாடுகள் தோன்றியதால் 1947ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் தமிழ், சிங்கள மொழி பற்றிய விடயம் உள்ளடக்கப்படவில்லை. எழுதிய மை காய்வதற்கிடையில் சிங்கள தலைமைத்துவமானது தமிழர்களது உரிமைகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 1950ஆம் ஆண்டுகளில் இருந்து தமிழ் ,சிங்கள தலைமைகள் முரண்படுவதும் இணக்கப்பாட்டுக்கு வருவதுமாக கிட்டத்தட்ட 30 வருடங்கள் சாத்வீக வழியில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. 1982களில் இருந்து தமிழர்களது உரிமை கோரிக்கையானது ஆயுதப்போராட்டமாக மாறியது. இற்றைவரைக்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் ஒற்றையாட்சி முறை பொருத்தமற்றது என உணரப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு.

இதற்கு சிறந்த உதாரணமாக 1987ஆம் ஆண்டில் அரசியல் அமைப்பு 13ஆம் இலக்க திருத்தச் சட்டம் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை குறிப்பிடலாம் .எனினும் இம்முறை கூட வட கிழக்கில் பயனற்றதாகவே போனது.

# தமிழர்க்கு சுயாட்சி

## சுய நிர்ணய உரிமையும் நான்காம் உலகக் கோட்பாடும்

தெ.மதுசூதனன்
(ஆசிரியர், அகவிழி சஞ்சிகை)

இன்று வரை இலங்கையில் நிலவுவது தேசிய இனப்பிரச்சினை என்பதை ஒத்துக்கொள்ளாமல் ஒரு பயங்கரவாத பிரச்சினை போன்று அணுகி கருத்துப்பரப்புரை செய்து கொண்டிருக்கும் சூழலில் சுய நிர்ணய உரிமை குறித்த அக்கறை, அதன் பொருள் கோடல் எந்தளவிற்கு பொருத்தமாக இருக்கும் என்பது சிக்கலானது. பொதுவாக நாம் சுய நிர்ணய உரிமையின் தாற்பரியம் பற்றிக் கோட்பாடு ரீதியில் பல்வேறு நூல்களை எழுத முடியும். கருத்தரங்குகள் வைக்க முடியும். ஆனால் இலங்கையின் ஆளும் அதிகார ஆதிக்க சக்திகளின் அரசியல் சொல்லாடல்களில் தேசிய இனப்பிரச்சினை என்பதை ஏற்காத அதன் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சொல்லாடல்கள் தான் தினமும் உற்பத்தியாகின்றன. இந்த நிலையில் சுய நிர்ணய உரிமை பற்றிய சாதகமான பரிசீலனை வருமா? சந்தேகம் தான். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் மனித உரிமைகள் பற்றிய அகல்விரி சிந்தனையும் பன்முக கலாசாரமும் முழுமையாக அரசியல் சொல்லாடல்களில் தாக்கம் செலுத்தவில்லை. அப்படியானால் சுய நிர்ணய உரிமை பற்றிய பரிசீலனை அரசியல் கலாசாரமாக பரிணமிக்க முடியுமா? முடியாது. இதற்கான சனநாயக பாரம்பரியமும் இங்கில்லை. அதைவிட சனநாயம் பற்றிய பார்வை நமக்குத் தெளிவாக உறுதிப்படவில்லை. சனநாயகம் என்பது ஒரு ஆட்சி முறை மட்டுமல்ல அது ஒரு கூட்டுவாழ்க்கை முறை.

இதைத்தான் டாக்டர் அம்பேத்கார் ஒவ்வொரு மனிதரும் மற்ற மனிதர்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்து நடப்பதே சாராம்சம் எனக் குறிப்பிட்டார் .ஆகவே நமக்கு சனநாயம் குறித்து ஆழமான புரிதலும் விளக்கமும் வேண்டும். அப்பொழுதுதான் சுதந்திரம் , சமத்துவம் , சகோதரத்துவம் யாவற்றையும் அங்கீகரிக்கும் வாழ்வியல் நெறிகள் சார்ந்து ஒழுக முடியும். இது தான் சமூக சனநாயகம்.

சுதந்திரம் ,சமத்துவம் , சகோதரத்துவம் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. இவை தனித்தனி அங்கங்கள் அல்ல. இவை மூன்றும் ஒன்றி ணைந்து விளங்க வேண்டும். அதுவே சன நாயகத் தன்மையா கும். இந்தப் பின்புலம் தான் சுய நிர்ணய உரி மையின் பொருள் கோட லுக்கு தெளிவான தர்க்கங்களை வழங்கும் . இரண்டாம் உலக மகாயுத்தத்தை தொடர்ந்து பிற்காலத்தில் தான் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சும் நடைமுறையும் வியா பித்து வந்துள்ளன. அதனுடன் இணைந்து இறைமை பற்றிய கோட்பாட்டாக்கமும் முனைப்படைந்துள்ளன. ஆனால் இது காறுமான பன்நாட்டு வரலாற்று அனுபவங்கள் , நடை முறைகள் யாவற்றிலிருந்தும் இலங்கை இன்னும் பாடம் கற்க தயாராக இல்லை. இந்த நிலையில் பிரிந்து செல்வதற்கான சுய நிர்ணய உரிமை பற்றிய பொருள்கோடல் , கலந்துரையாடல் யாவும் சாத்தியமாக முடியுமா அல்லது சாதகமா கத்தான் உதவுமா? சிக்கல் மேல் சிக்கலாகத்தான் உள்ளது. மாறிவரும் பன்னாட்டு நடப்பு நிலைமைகளில் இருந்து சனநாயகம் பற்றிய புதிய விளக்கத்துக்கும் பொருள் கோடலுக்கும் தயாராக வேண்டும். சனநாயகம் என்பது ஒரு ஆட்சி முறை மட்டுமல்ல. அது ஒரு கூட்டு வாழ்க்கை முறை என்ற தன்மை நாம் அனைத்தையும் பரிசீலிக்க உதவும். ஆகவே நாம் எமது சிந்தனை ,சொல், செயல் யாவற்றையும் மாற்றவேண்டும். அந்த ரீதியில் சுய நிர்ணய உரிமையும் புதிய விளக்கத்திற்கு உள்ளாகும். புதிய புதிய அர்த்தப்பாடுகளின் இணைவுக்கும் பொருந்தக்கூடிய தாக மாற்ற முறும்.

ஆகவே நாம் வேறு விதமாகச் சிந்திப்பது தான் முக்கியம். மேலும் இந்த இடத்தில் நாம் வேறொரு சிந்தனை முறைமையையும் பதிவு செய்ய வேண்டும்.

2ஆம் உலக யுத்த முடிவில் ஆசிய ஆபிரிக்க பிராந்தியங்களில் புதிய அரசுகள் உதயமாயின. வடக்கு ஐரோப்பாவிலும் சீனாவிலும் புதிய அரசுகள் தோன்றின. இப் பிற்புலத்தில் மூன்றாவது உலகம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது. முதலாளித்துவ பொருளாதாரம் மூலம் வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளையும் முதலாம் உலகம் என்றும்,

சோவியத் ரஷ்யா தலைமையிலான கம்யூனிஸ்ட் நாடுகளை இரண்டாம் உலகம் என்றும் , இந்த இரண்டு உலகத்தினின்றும் வேறுபட்ட சமூக பொருளாதார அரசியல் நிலைமைகளைக் கொண்டிருந்த நாடுகள் யாவும் மூன்றாம் உலகம் என்றும் அழைக்கப்பட்டது. 1990 களின் தொடக்கத்தில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியுடன் இரண்டாவது உலகம் என்றவரையளவு பொருளற்றதாயிற்று. அதேநேரம் 1980 களின் பின்னர் உலகளாவிய ரீதியில் தேசிய இனங்களின் போராட்டங்கள் வலுப் பெறத் தொடங்கின.

1945 இல் உலகளாவிய ரீதியில் 72 அரசுகள் இருந்தன. இந்த எண்ணிக்கை 1993இல் 191 ஆக உயர்ந்தது. இந்த 191 அரசுகளின் எல்லைகளுள் 5000 தேசிய இனங்கள் உள்ளன. உலகில் 5000 வரையிலான தேசிய இனங்களின் நோக்கில் அரசியல் பொருளியல் வரலாறு பண்பாடு யாவற்றையும் நோக்கும் முறை நான்காவது உலகம் எனும் கோட்பாட்டால் விளக்கப்படுகிறது. அதாவது ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பார்வையில் தேசப் படத்தை விளக்கும் சிந்தனை முறை தோற்றம் பெற்றுள்ளது. இந்தப் பின்னணியில் சுயநிர்ணய உரிமை எனும் கோட்பாடு மேலும் புதுவிளக்கம் பெறும் .நான் காம் உலகம் எனும் கோட்பாடாக நம் புதிய வரையறைகளையும் புதிய விளக் கங்களையும் வேண்டி நிற்கின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்காக முடியாது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# தரிசனம்

சரிநிகர்

## இலங்கை இனப்பிரச்சினையில் இங்கிலாந்தின் தலையீடு

இலங்கைத்தீவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வருவதற்கு உதவ வேண்டும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை பிரித்தானியா நீக்க வேண்டும். விடுதலைப்புலிகள் தரப்பு பிரதிநிதியை இந்தப் பாராளுமன்றத்திற்கு அழைத்துப் பேச வைத்து அவர்களது கருத்தை அறிந்து கொள்ளவேண்டும்.

ஜூலை மாதமளவில் லண்டனில் மாநாடு ஒன்று நடாத்தப்படவேண்டும். அம் மாநாட்டுக்கு அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்வதற்கு அழைக்கப்படல் வேண்டும்.

இந்த விடயங்கள் தாம் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட விடயங்கள். யார் பேசினார்கள் ? பாராளுமன்ற உறுப்பினர்கள் பல கட்சிகளின் பிரதிநிதிகள் இவர்களில் அமைச்சர்கள் கூட அடக்கம்.

பிரித்தானியப் பாராளுமன்றத்தில் மே மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற விவாதம் இலங்கையில் எதிர்ப்பு அலைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

ஈராக் நாட்டில் படுகொலைகளை நடத்தி வருகின்ற அமெரிக்காவிற்கு துணை போகும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் அந் நாட்டின் பாராளுமன்றத்திற்கும் இலங்கையின் உள் நாட்டு அலுவல்கள் பற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது என்ற தோரணையில் காரசாரமான கண்டனங்கள் பொறுப்பு மிக்கவர்கள், அறிஞர்கள் சர்வதேச விவகாரங்கள் பற்றித் தெளிவான விளக்கம் உள்ளவர்கள் கூட வெளியிட்டு இருக்கின்றார்கள். இந்தப்பிரச்சினையின் சரி பிழை ஒரு புறமிருக்கட்டும். அதைப்பற்றி நான் இக்கட்டுரை யில் விவாதிக்கப்போவதில்லை. ஈராக் மீது கொடூரம் இழைத்தவர்களுக்கு, அந்தக் கொடுமைகளைத் தடுக்க முடியாதவர்களுக்கு எங்கள் நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது என்ற தோரணையில் பேசுவது வேடிக்கையானது. இந்தப் பேச்சின் உள்ளே மறைந்திருப்பனவும் வெளிப்புட்டுத் தெரிவனவுமான தப்பெண்ணங்கள் பல அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

உள்நாட்டு விவகாரம் பற்றிப் பேசும் உரிமை பிரித்தானியாவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடையாது. இது பற்றித் தீர்மானம்போடும் அதிகாரம் அந்தப் பாராளுமன்றத்திற்கு இல்லை என்று கூறுபவர்கள் அந்த நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுச் சுதந்திரத்தை மறுக்கிறார்கள் இல்லையா?

'எங்கள் நாட்டு விவகாரங்கள் பற்றிப் பேச வேண்டாம் என்று உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லுங்கள் அவர்கள் வாயை அடக்கிக்கொள்ளச் சொல்லுங்கள்' என்றல்லவா கேட்கிறார்கள்.

இதே பிரிட்டிஷ் பாராளுமன்றம் தான் 2001ஆம் ஆண்டில் 20 அமைப்புக்கள் குறித்து தடைச்சட்டம் கொண்டு வந்தது. அப்போது தமது பாராளுமன்றம் எடுத்த தீர்மானம் நல்விளைவுகளைக் கொண்டு வந்ததா? அதன் பாதக விளைவுகள் என்ன? சாதக விளைவுகள் என்ன? அவை பற்றி அவர்கள் தாராளமாக விவாதிக்கட்டும். எம் நாட்டைப் பற்றி எமது மக்களைப் பற்றி அவர்கள் காட்டும் கரிசனைக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

எமது உள்நாட்டுப் பிரச்சினை இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது. இந்தச் சர்வதேச மயப்படுத்தலினால் முதலாவதாகப் பாதிக்கப்பட்ட நாடு பிரித் தானியா தான். அந்த நாட்டுக்கு எம் நாட்டு மக்கள் அகதிகளாக ஓடினார்கள் . 1983இல் அங்கே எத்தனையோ பேர் தஞ்சம் தேடி ஓடினார்கள் . பிரித்தானியாவிற்கு எம் நாட்டினால் ஏற்பட்ட தலையிடிகளில் இது முக்கியமானது.

பிரித்தானிய அரசாங்கம் வேறு. அந்த நாட்டின் பாராளுமன்றம் வேறு. பிரித்தானிய அரசியல் கலாசாரம் நம் நாட்டை விட உயர்வான பண்புகளை, விழுமியங்களைக் கொண்டது என்பதை ஒப்புக் கொள்வதில் நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. இந்த நாட்டின் அகதிகளுக்கு ஏன் அவர்கள் தஞ்சம் கொடுக்க வேண்டும்? தஞ்சம் கொடுத்து அவர்களை அங்கே வைத்திருக்க வேண்டிய கட்டாயம் எதுவும் அவர்களுக்கு இல்லையே. இருந்தாலும் மனித உரிமைச் சட்டங்களை மதிக்கின்ற அரசியல் கலாசாரம் அங்கு வளர்ந்திருக் கின்றபடியால் தான் அவர்கள் அகதிகளை ஏற்று அவர்களுக்கு வாழ்வளித்தார்கள். இவ்விடயத்தில் பிரித்தானியா இன , மதபேதங்களைக்காட்டியதாகக் கூறமுடியாது.

பிரித்தானியாவில் 2001ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தடைச்சட்டம் இப்பொழுது அங்கு புகலிடம்தேடியுள்ள தமிழர்களுக்கு இடைஞ்சல்களைத் தருவதாயும் அவர்களுடைய சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதாகவும் அமைந்திருப்பதை எட்வேட்டவே என்ற உறுப் பினர் சுட்டிக்காட்டிப் பேசினார்.

இந்த நாட்டில் உள்ள தமது பிரதிநிதிகள் மூலமாக இலங்கை அதிகாரிகள் மக்கள் பேசுவதைத் தடுக்க முற்படுகின்றனர். இந்த நாட்டில் நாம் இது போன்ற விவாதங்களை நடத்துவோம். அது எமது ஜனநாயக உரிமை என்று அந்த உறுப்பினர் பேசினார்.

பிரித்தானியாவில் வாழுகின்ற தமிழர்கள் இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் அவர்களைப் புலிமுத்திரை குத்தி ஓரங்கட்டுவதற்கு முயற்சி நடப்பதாக அங்குள்ள உறுப்பினர் தெரிவித்தார்.

**ஜீவகன்தாஸ்**

பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்களில் கணிசமானோர் பிரிட்டிஷ் பிரசா உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே இந்த நடவடிக்கை என்று சிலர் விமர்சிக்கி றார்கள். சரி , வாக்குகளைப் பெறும் சுயநல நோக் கில் தான் பேசுகிறார்கள் இதய சுத்தியோடு பேசவில்லை என்று வைத்துக் கொள்வோம் பிரித்தானியாவின் உள் நாட்டு அரசியலின் முக்கியமான விடயமாக எமது பிரச்சினை ஆகிவிட்டதென்பதன் அடையாளமாக இதை நாம் கருதுவதா?

இலங்கையின் இன நெருக்கடிக்கு யுத்தத்தினால் தீர்வு இல்லை. பிணக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலமே இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என விவாதத்தில் கலந்து கொண்ட அனைத்துத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கருத்துக்கூறினர். ஐரோப்பிய யூனியன் விடுதலைப்புலிகள் மீதான தடையை அறிவித்தமை பேச்சுவார்த்தை ஊடான சமாதான முயற்சிகளுக்கும் பின்னடைவையே கொண்டு வந்தது என்ற கருத்தையும் பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தினர். பிரித்தானியப் பாராளுமன்ற விவாதம் எமது நாட்டுப் பிரச்சினை மீதான தலையீடு என்று நோக்குவதை விடுத்து பிறநாடுகளின் நேரடித் தலையீடு இன்றி எம் பிரச்சினை களை நாமேதீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை எம் நாட்டு மக்கள் மனதில் தோற்றுவிக்க வாய்ப்பாக நாம் இதனைப் பயன்படுத்த வேண்டும். அதனை விடுத்து ஈராக்கில் உங்கள் நாடு என்ன செய்தது? என்ற கேள்வியை எழுப்புவது பொருத்தமற்றகேள்வி. இந்த கேள்வியை வேண்டுமாயின் பிரித்தானிய அரசாங்கத்திடம் இவர்கள் கேட்கட்டும். பிரித்தானிய அரசாங்கம் வேறு. அந்த நாட்டின் பாராளுமன்றம் வேறு. பாராளுமன்ற உறுப்பினர்கள் தனித்தோ ஒரு குழுவாகவோ ஒரு கருத்தை தெரிவிக்கும் போது அவர்களை அரசாங்கத்தின் கருத்தைக் கூறுபவர்களாக ஏன் முத்திரை குத்த வேண்டும். அவர்கள் தம் அரசாங்கத்தின் செயற்பாட்டை விமர்சனத்திற்கு உள்ளாக்கு பவர்களே அன்றி அரசாங்கத்திற்காக வாதாடு பவர்கள் அல்லவே.

இந்த இடத்தில் தான் நாம் தவறு இழைக்கின்றோம். அரசுகளையும் அரசு அல்லாத பிறவகிபாகம் பெறுவோரையும் (Non State Action) பிரித்தறியும் மனப்பக்குவம் புரிதல் எமக்கில்லை. இந்த புரிதல் இல்லாதவரைக்கும் அரசு அல்லாத பிறவகிபாகம் பெறுவோரின் பங்களிப்பை ஆக்கப் பூர்வமான முறையில் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல் எமக்கும் கைவரப்போவதில்லை.

1. பிரித்தானிய அரசாங்கம் வேறு அந்த நாட்டின் அரசியல் கட்சிகள், பாராளுமன்றம் வேறு என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். பிரித்தானிய அரசியல் கட்சிகள் அந்த நாட்டின் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டவை. நாம் அதே போன்று பாராளுமன்றம் அரசாங்கத்தின் ஒரு அங்கம் தான். ஆனால் கட்சிகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் தனித்த இருப்பு ஒன்று இருக்கின்றது என்பதை நாம் மறக்கக்கூடாது அவை (Non State Action) என்ற வகையில் அடங்குபவை. அண்மையில் ரணில் விக்கிரமசிங்க பூட்டான், சீனா ஆகிய நாடுகளுக்குப் போனார். அந்த நாடுகளின் விருந்தினராகவும் அங்கிருந்தார் .

ஆனால் அவர் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகவா சென்றார் .அவருக்கு (Non State Action) என்ற வகிபாகம் தானே இந்தத் தருணத்தில் இருந்தது. பிரித்தானிய பாராளுமன்றத்தில் குரல் எழுப்புபவர்களை அரசு அல்லாத வகிபாகம் பெறுவோர் என்ற முறையில் நாம் பார்க்கவேண்டும் அல்லவா ?

2. இதே தொடர்பில் இன்னொரு விடயத்தையும் நாம் நோக்குதல் வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் வேறு. அந்த ஒன்றியத்தின் உறுப்பு நாடு வேறு . ஐரோப்பிய ஒன்றியம் அரசுகளுக்கிடையிலான உறவை வெளிப்படுத்தி நிற்கும் நிறுவனம். மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களும் எமக்கு உணர்த்துவது யாது? அரசுகள் மீது தொடுக்கும் குற்றச்சாட்டுக்களை அரசு அல்லா வகிபாகிகள் மீதும் விபஸ்தை இன்றி தொடுப்பதும் முத்திரை குத்துவதும் வசை பாடுவதும் எமது அறிவீனத்தையும் கையாலாகாத் தனத்தையுமே எடுத்துக்காட்டுகின்றது. பிரித்தானிய பாராளுமன்ற விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை எதிர்கொள்வோர் ஈராக் விவகாரத்தை இந்த விடயத்தில் சம்பந்தப்படுத்துவது தர்க்க நியாயத்தின் பாற்பட்ட விடயமல்ல.

அடுத்ததாக இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடும் உரிமை பிற நாட்டு அரசாங்கங்களுக்கோ நபர்களுக்கோ அமைப்புக்களுக்கே கிடையாது என்ற வாதத்தை எடுத்துப்பார்ப்போம் .உலக வரலாற்றை பல நூற்றாண்டுகள் பின்நோக்கி நகர்த்தும் வாதங்களில் ஒன்று தான் ஒரு நாட்டிற்குள் நடக்கும் உள் விவாகாரங்களில் அயல் நாட்டிற்கோ தூரத்தில் இருக்கும் இன்னொரு நாட்டிற்கோ உரிமை இல்லை என்றும் நாடுகளின் இறைமை என்னும் கருத்து. இந்தக் கருத்தை ஒரு கோட்பாடாக உருவம் கொடுத்தது வரலாற்று நிகழ்வு தான். 1646ஆம் ஆண்டின் வெஸ்ட்பாலியா உடன்படிக்கை ஐரோப்பாவில் 30 ஆண்டு போர் என்னும் நீண்ட கொடிய யுத்தத்தின் முடிவில் எழுதப்பட்ட உடன்படிக்கை இது.

30 ஆண்டுப்போர் கத்தோலிக்க மதப்பிரிவினர் ,சீர்திருத்த மதப்பிரிவினர் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட மதச் சண்டையாகும். அக்காலத்தில் இன்றைய ஜேர்மனி பல சிறு சிறு அரசுகளாக சிதறுண்டு இருந்தது . போரின் பிரதான களமாக நிகழ்ந்தது ஒரு அரசின் எல்லைக்குள் சிறுபான்மையினராகவுள்ள ஒரு மதப்பிரிவினரை அந்த அரசு வதைக்கின்றது என்ற காரணத்தைக் காட்டி அயலில் உள்ள அரசு தன் மதப்பிரிவினரை காப்பதற்காக தன் படைகளை அனுப்பும். இவ்விதமாக அரசுகள் ஒவ்வொன்றும் யுத்தம் மதப்பிரிவினரைக் காப்பாற்றுவதற்காக களத்தில் இறங்கிப் போரிட்டன. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வெஸ்ட்பாலியா உடன்படிக்கை உதவியது. ஐரோப்பாவில் சமாதானத்தை கொண்டுவர உதவிய அந்த உடன்படிக்கையின் சாராம்சம் இது தான். ஒரு நாட்டின் எல்லைக்குள் வாழும் பிரஜையை அந்த நாடுவதை செய்யலாம், கொலைசெய்யலாம், என்னவும் செய்ய லாம், அதனை அயல்நாடோ பிற எந்த நாடோ தட்டிக்கேட்கக் கூடாது. அந்தப்பிரச்சினை குறிப்பிட்ட நாட்டின் உள்விவகாரம்.

வெஸ்ட்பாலிய உடன்படிக்கையின் சாராம்சமான செய்தி இதுதான். ஆனால் உலகில் இன்று மனித உரிமைகள் இயக் கம் பலம் பொருந்திய சக்தியாகப் பரிணமித்துள்ளது. அரசுகளின் தட்டிக்கேட்க முடியாத இறைமை என்ற கருத்தை உலக சமூகம் ஏற்க வேண்டும் எங்கள் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட உங்களுக்கு உரிமைகிடையாது என்று உலக சமூகத்தைப் பார்த்து உலகின் பாசிச அரசுகள் கேட்டுக்கொண்டே இருக் கின்றன. அதற்கு உலக சிவில் சமுகம் கூறும் பதில் என்ன? நாம் எங்களில் ஒவ்வொருவரையும் உலக சிவில் சமூகத்தின் உறுப்பினர் என்ற நிலையில் வைத்துச் சிந்திப்பதன் மூலமே இதற்கு சரியான விடையைக் காணலாம்.

### பிரச்சினைக்குத் தீர்வு...



சுயநிர்ணய உரிமை வெறுமனே அரசியல் கோட்பாடு அல்ல

கோ.றுஷாங்கன் (ஊடகச் செயற்பாட்டாளர்)

சுயநிர்ணய உரிமை என்பது வெறு மனே ஒரு அரசியல் கோட்பாடு அல்ல. அது பொதுவான ஒன்று. அடிப்படையில் ஒருவர் தன்னைப் பற்றிய தீர்மானங்களைத் தானே எடுப்பது தொடர்பானது. இது எல்லோருக்குமே பொதுவானது. குடும்பம் என்ற அடிப்படைச் சமுதாய அலகின் கூறுகளான கணவன் அல்லது மனைவிக்கும் இது அவசியம். பிள்ளைகளுக்கும் கூட இந்த உரிமை அடிப்படையானது. (அறியாப் பருவம் தவிர– அங்கும் ஒரு எல்லை உண்டு

இந்தக் குடும்பம் என்பது ஒரு சமூகமாக , சமுதாயமாக, இனமாக இனங்காணப் படும் போது , இந்தச் சுயநிர்ணய உரிமை என்பதன் பரிமாணம் அதிகரிக்கிறது. இங்கு இது ஒரு பிரச்சினைக்குரிய விடயம் ஆகும்போது அது தவிர்க்க முடியாதபடி அரசியல் ஆகிவிடுகிறது.

ஐ.நா. சாசனத்தில் 1960ஆம் ஆண்டில் இனங்களின் அல்லது நாடுகளின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலும் குறிப்பாக, முன்னாள் காலனியாதிக்க நாடுகள், சட்ட விரோத ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட நாடுகள், இனவாத அரசுகள் ஆகிய அளவீடுகளின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுகிறது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஐ.நா சாசனத்தில் இந்த மூன்று அடிப்படைகளுமே அவர்களுக்குப் பொருந்துகிறது. பிரித்தானியக் காலனியாதிக்கத்தால் இலங்கை பலவந்தமாக ஒற்றைத் தேசமாக்கப்பட்டது. காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்னர் ஆட்சிபீடமேறிய பெரும்பான்மை யினர் சிறுபான்மையினர் பாரம்பரியமாகச் செறிவாக வாழும் பிரதேசங்களை ஆக்கிர மித்தனர். இந்த ஆக்கிரமிப்பு இனவாத அரசியலாகவே முன்னெடுக்கப்பட்டது. ஆக , இந்த மூன்று அடிப்படையிலும் ஐ.நா சாசனத் தின் படி சுயநிர்ணய உரிமை கோரும் அந்தஸ்து ஈழத்தமிழர்களுக்கு உண்டு.

தமது போராட்டத்தை இந்த அடிப்படையில் சர்வதேச அளவில் தமிழர்கள் முன்னெடுப்பதுடன், அதனைச் சர்வதேச நாடுகளும், ஐ.நா வும் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதன் மூலம் ஒரு தீர்வை நோக்கி நகரமுடியும்.

ஆனால், இந்த சுயநிர்ணயத்தின் எல்லை ஒன்றுபட்ட ஐக்கிய தேசத்துக்குள் இருப்பதற்கு இலங்கை அரசின் செயற்பாடுகள் அனுமதிப்பதாயில்லை. சுயநிர்ணய உரிமையின் எல்லை விரிவடைந்து , பிரிவினையை நோக்கி நகரத் தலைப்பட்டமைக்கு இதுவே பிரதான காரணமாகும். இந்த நிலை மென்மேலும் நீடிக்கும் போது , பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும். இதுவே இன்றைய அரசியல் யதார்த்தம்.

பிச்சைக்காரனுக்கு நீ ஒன்றும் போடவில்லையாயினும் அவன் பையை கிழிக்காமல் விட்டால் போதும்.

—அயர்லாந்து பழமொழி

வலம்புரி

## யாழ்ப்பாணத்தை தாண்டிச்செல்லும் நிதிசார் அமைப்புக்களின் சேமிப்பு

தென்னிலங்கையைத் தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் பல்வேறு வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் நிதிசார் அமைப்புக்கள் இயங்குகின்றன.

நாட்டின் தலைநகரில் தலைமையகமும் ஏனைய இடங்களில் கிளை நிறுவனங்களும் இயங்குவது வழமையாயினும், அவற்றின் சேமிப்புக்கள் அந்தந்தப் பிராந்தியங்களில் முதலீடாக மாறும் செயற்பாட்டையும் காண்கிறோம்.

எனினும் இலங்கையில் நிலவக்கூடிய இனவாத சிந்தனையும், ஆட்சியில் ஏற்பட்டிருக்கக் கூடிய இனப் பக்கசார்பும் கொழும்பை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் அமைப்புக்களின் செயற்பாடுகளிலும் பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் நிதி சார் அமைப்புக்கள் யாழ்ப்பாண மக்களிடம் இருந்து பெருந்தொகையான நிதியை சேமிப்பாக எடுத்துக்கொள்கின்றபோதிலும்,

அதில் ஒரு சிறு பகுதியையேனும் யாழ்ப்பாணத்தில் முதலீடாக்குவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

இக் குற்றச்சாட்டுக்களில் இருந்து விலகிக் கொள்ளக்கூடிய நிதி நிறுவனங்கள் இருந்தாலும் கூட, ஒட்டுமொத்தப் பார்வையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு பொதுவானதாகவே காணப்படுகிறது.

பொதுமக்கள் மற்றும் புத்திஜீவிகளிடம் இருந்து எழுந்திருக்கக்கூடிய இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தனது தரப்பு நியாயங்களை முன்வைப்பது நிதி நிறுவனங்களின் கடமையாகும்.

அசாதாரண சூழ்நிலையில் யாழ்ப்பாணத்து மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தவேளை, யாழ்ப்பாணத்திற்கும்-கொழும்பிற்கும் விமான சேவையை நடத்திய நிறுவனங்கள் பொருட்களை எடுத்துவருதல் என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாய்களைதம்வசமாக்கி விட்டன என்ற குற்றச்சாட்டு, புள்ளி விபரரீதியாக யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகர்களால் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கப்பல் கட்டணத்துடனான ஒப்பீட்டிற்கு அப்பால் பொருட்களுக்கான விமான கட்டணங்கள் பன்மடங்கு அதிகமானவை என்பதுடன் அவை பொருட்களின் விலைகளுடன் சேர்க்கப்பட்டு நுகர்வோரிடம் அறவிடப்பட்டது என்ற குறைகூறலும் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இத்தகைய நடவடிக்கைகள் மனித சமூகத்திற்கு பாரிய பாதிப்பை கொடுக்கக்கூடியவை என்ற மன ஆதங்கமும் பொது மக்கள் தரப்பின் முன்வைப்பு.

இதனை இப் பகுதியில் எழுதுவதன் ஊடாக குறித்த நிறுவனங்களை சாடுவது என்ற குற்றச்சாட்டோ குமுறலோ எழுவது எவ்வகையிலும் பொருத்துடையது அல்ல. மாறாக மக்கள் பேசிக் கொள்ளும் கருத்துக்களை ஊடகங்கள் வெளிப்படுத்தும்போது அங்கு ஓர் நியாயத்தன்மை தோற்றம் பெறும்.

மக்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையே ஓர் நியாயப்பாட்டை ஏற்படுத்தி நல்லுறவை வளர்ப்பதில் ஊடகங்களின் பங்களிப்பு அளப்பரியது என்னும் உண்மையை உணர்ந்து கொண்டோர் இதனை வரவேற்கவே செய்வர்.

அவ்வகையில் மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டின் இன்னுமோர் வடிவம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிதி நிறுவனங்களுக்கும் பொருத்துடையதாக்கப்பட்டுள்ளதால் அது விடயத்தில் சம்பந்தப்பட்ட நிதி அமைப்புக்கள் முன்னெழுந்து யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட முதலீடுகளையும், தொழில் வாய்ப்புக்களையும் வழங்க வேண்டும். இது காலத்தால் செய்த பேருதவியாகும்.

# வீட்டுக்கடன் வழங்குவதை மட்டுப்படுத்தும் நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டுக்கடன் வழங்குவதை மட்டுப்படுத்தும் நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு கிடையாது என முதலீட்டு ஊக்குவிப்பு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பாராளுமன்றத்தில் தெரிவித்தார். கூடுதலான ஊழியர்களுக்கு கடன் வழங்கும் நோக்கத்துடனேயே ஊழியர்களின் நிறுவனங்களில் கடன் வழங்கும் நடைமுறையை நிறுத்தி வங்கிகள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுத்ததாகவும் அமைச்சர் கூறினார்.

அரசாங்க ஊழியர்களுக்குக் கடன் வழங்குவதை வங்கிகள் இடை நிறுத்திக் கொண்டுள்ளமை தொடர்பாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர், அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் வீடொன்றை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

அதன் காரணமாகத்தான் வங்கிகள் ஊடாக கடன் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் இதில் பிரச்சினை எழலாம். முன்பு ஒரு மில்லியன் கடன் வழங்கப்பட்டது. இப்போது மூன்று மில்லியன்வரை வழங்கப்படுகின்றது.

அதேநேரம் முன்பு கடனுக்கான 11 வீத வட்டியில் 7 வீதத்தை திறைசேரி செலுத்தி வந்தது. மிகுதி 4 வீதம் ஊழியர்களால் செலுத்தப்பட்டுவந்தது. ஆனால் தற்பொழுது வட்டியை 12.5 வீதமாக அதிகரிக்க வேண்டுமென வங்கிகள் கோரியுள்ளதாக அமைச்சர் கூறினார்.

தொழில் புரியும் நிறுவனங்கள் ஊடாக கடன் வழங்கிய போது வருடமொன்றுக்கு 500 ஊழியர்களுக்கு 500 மில்லியக் கடன் வழங்கப்பட்டது. ஆனால் 2005-2007 காலப் பகுதிகளில் வங்கிக்கு மாற்றபட்ட பின்னர் 17 ஆயிரம் ஊழியர்களுக்கு 15.6 பில்லியன் செலுத்தப்பட்டுள்ளது என்றார். (ச)

# சிற்றூழியர்களை பொது எழுதுநர் சேவைக்கு நியமனம் செய்வதற்கான நேர்முக விசாரணை

## 36 பேருக்கு அழைப்பு

வடக்குக் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட அரசாங்க சேவையின் சிற்றூழியர்களை பொது எழுதுநர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் II ஆ பிரிவுக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையின் அடிப்படையில் எழுதுநர், தட்டெழுத்தாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டோர் பின்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் (மூலப்பிரதிகளுடன் நிழற்படப் பிரதிகளும்), பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதியுடன் புகைப்படப் பிரதியும்) தேசிய அடையாள அட்டை (புகைப்படப்பிரதியும்), திணைக்களத் தலைவரின் சிபார்சு, நிரந்தர நியமனக்கடிதம் (புகைப்படப் பிரதியுடன்) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டமைக்கான கடிதம்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர் விபரம் வருமாறு;

சி.பிரசன்னா (பிரதேச சபை, வேலணை), கே.கிருபானந்தன் (வலயக்கல்வி திணை.வடமராட்சி), கிருஸ்ணகுமார் (பிரதேசசபை, நல்லூர்), கே.கணநாதன் (வலயக் கல்வித் திணை. வலிகாமம்), கே.கேதீசன் (வலயக்கல்வி திணை.கிளிநொச்சி), என்.ரஞ்சித்குமார் (கட்டடங்கள் திணை.முல்லைத்தீவு), எம். கே.இளங்கோ (சுகாதார சேவைகள் பணிமனை, கிளிநொச்சி), ஐ.அமிர்தசீலன் (வலயக்கல்வி திணை.கிளிநொச்சி), ரி.சிவலோகராசா (சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்), கே.தயாநிதி (மன்னார்), எஸ்.நந்தகுமார் (ஏபி அன்ட் ஏச் யாழ்ப்பாணம்), எம்.தயாபரன் (பிரதேச சபை வலி கிழக்கு), வி.பஞ்சாட்சரநாதன் (சுகாதார சேவைகள் பணிமனை, வவுனியா), எஸ்.யூட் (நகரசபை மன்னார்), எஸ்.கனகையா (உடையார் கட்டு, கிளிநொச்சி), எஸ்.குகதாசன் (சுகாதார சேவைகள் பணிமனை, கிளிநொச்சி), ரி.தயாளினி (பிரதேச சபை, வலி. தென்மேற்கு), டி.திருச்செல்வம் (நகரசபை பருத்தித்துறை), எஸ். சிவநாதன் (வலயக்கல்வி திணை. வடமராட்சி), என்.மோகனரூபன் (பிரதேச சபை, வேலணை),

ஆர்.தயானந்தன் (பிரதேச சபை நல்லூர்), வி.விஜயகுமார் (பி.ச.வேலணை), பி.மோகனராஜன் (சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்), கே.ஆதித்தன் (பி.ச.நல்லூர்), எம்.பிரதீபன் (சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்), எஸ்.ஜெயபவன் (பிரதேச சபை, சுன்னாகம்), கே.சிவகுமார் (பொது அரசினர் வைத்தியசாலை, வவுனியா), ஆர்.சித்திரா (சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்), ஏ.அன்ரன் விமல்ராஜ் (பிரதேச சபை), ஆர்.உமா (பிராந்திய ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), ஏ.விக்னேஸ்வரன் (பிரதேச சபை பூநகரி), என்.மோகனகரன் (பிரதேசசபை, ஊர்காவற்றுறை), கே.கிருசாந்தி (விவசாயத் திணை. வவுனியா), கே.றோகினி (வலயக்கல்வித்திணை, கிளிநொச்சி), எஸ்.சுதர்சினி (பிரதேசசபை, மானிப்பாய்), மு.சுதர்சன் (உள்ளூராட்சி திணை. வடபிராந்தியம்) (ச)

# நெடுந்தீவை புலிகள் தக்கவைத்திருந்தால் வட பகுதிக்கான விநியோகம் பாதிக்கும்

## முன்னாள் மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டை கைப்பற்றுவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களை தயார்படுத்தி வருகின்றனர் என்பதனையே நெடுந்தீவுத் தாக்குதல் உணர்த்துகின்றது. அங்கு நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன என்று இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வியாழக்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; நெடுந்தீவுப் பகுதியில் விடுதலைப்புலிளால் நடத்தப்பட்ட தாக்குதல் அவர்களின் திட்டத்திற்கான ஒரு தகவல். விடுதலைப்புலிகள் நெடுந்தீவை தக்க வைத்திருந்தால் அது குடாநாட்டின் வட பகுதிக்கான விநியோகங்களை பெருமளவில் பாதித்திருக்கும்.

விடுதலைப்புலிகள் பூநகரியில் இருந்து 130 மி.மீ பீரங்கிகள் மூலம் பலாலித் தளத்தை தாக்கியிருந்தனர். அது 27 கி.மீ தூரவீச்சுகொண்டது.

இந்த பீரங்கித் தாக்குதலின்போது படையினர் தமது பாதுகாப்பை தேடி ஓடியுள்ளனர். அவர்கள் பதுங்கு குழிக்குள் பதுங்கும்போது அவர்களால் தரையின் ஒரு பகுதியையே பார்க்க முடியும். வானத்தை பார்க்க முடியாது இது தான் அன்று பலாலியில் நடந்தது. முதலில் பீரங்கித் தாக்குதலை நடத்திவிட்டு பின்னர் வான்தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தியிருந்தனர்.

விடுதலைப்புலிகளிடம் இரண்டுக்கும் மேற்பட்ட விமானங்கள் உள்ளன. அவர்களின் விமானங்கள் கொழும்பு வந்து தாக்குதலை நடத்திவிட்டு பாதுகாப்பாக திரும்பிவிட்டன.

அவர்களால் கொழும்புக்கு வந்து குண்டு வீச முடியுமானால் மிக இலகுவாக யாழ்.குடாநாட்டுக்கும் செல்ல முடியும். அது அவர்களின் தளத்தில் இருந்து 10 நிமிட பயணத்தூரத்தில் உள்ளது. இது தான் பலாலியினதும் அங்கு உள்ள படையினரதும் நிலைமைகள்.

விடுதலைப்புலிகளின் விமானங்களை மேலும் ஒரு தடவை வானில் எழுந்தால் அவை அழிக்கப்படும் என பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

ஆனால் இது தொடர்பாக அவரால் உத்தரவாதம் தர முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார் சரத் முனசிங்க. மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க இராணுவத்தில் 30 வருடங்களாக பணியாற்றி இருந்ததுடன் யாழ்.குடாநாட்டின் கட்டளை அதிகாரியாகவும் இராணுவத்தின் பேச்சாளராகவும் பணியாற்றியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஐக்கிய அரபு இராச்சியத்துடன் நாளை ஒப்பந்தம் கைச்சாத்து

ஐக்கிய அரசு இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்று இன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில் புரியும் இலங்கையர்களின் நலன்களை அடிப்படையாக வைத்தே இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் இலங்கை வந்துள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழில் அமைச்சர் பேராசிரியர் அலி பின் அப்துல்லா ஹறத் அல் காபி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு வழங்கவேண்டிய ஆகக்குறைந்த சம்பளம் 150 அமெரிக்க டொலர்கள் என இந்த ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டும், உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டும் அத்துடன் அந்த நாட்டு மக்கள் வழமையாகப் பெற்றுக்கொள்ளும் விடுமுறைகளையும் இலங்கையர்கள் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தற்போது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். இவர்களில் 65 சத வீதமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ-5)

## காயமடைந்தவர் மரணம்

(இணுவில்)

மனநோயாளியான மருமகன் தாக்கியதில் படுகாயமடைந்த மாமனார் நேற்று முன்தினம் அதிகாலை யாழ்.போத னா வைத்தியசாலையில் உயிரிழந்தார். இணுவில் மத்தியில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் மனநோயாளியான மருமகன் தாக்கியதில் சுப்பையா சதாசிவம் (வயது-80) என்ற மாமனார் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 7 ஆம் தினங்கள் மேற்கொண்ட சிகிச்சை பயனளிக்காத நிலையில் மாமனார் நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்ட மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-5)

## புலிகளின் விமானங்களை அவதானிக்க நெய்வேலியில் ராடர் வாகனங்கள்

விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்களை அவதானிப்பதற்காக தமிழகம் நெய்வேலியில் வான்வழி அலை வரிசைகளை கண்டறியும் ராடர் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கை இராணுவத்திற்கு எதிராக விடுதலைப்புலிகள் வான்வழித் தாக்குதலை நடத்தியிருப்பதைத் தொடர்ந்து இந்தியாவிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி தமிழக கடலோரத்தில் உள்ள கடலூர் மாவட்டத்தின் நெய்வேலி விமானத் தளத்தில் இந்திய இராணுவத்தின் சென்னை கேந்திரம் சார்பில் வான்வழி அலைவரிசைகளைக் கண்டறியும் ராடர் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் விடுதலைப்புலிகள் இலங்கை விமான நிலையத்தில் திடீர் தாக்குதல் நடத்தினர். இதனால் இலங்கை இராணுவத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டதோடு, பதற்றமும் நிலவியது. இந்நிலையில் இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் கடலோரப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பை அதிகரித்துள்ளது.

குறிப்பாக தமிழக கடலோர மாவட்டங்களிலும் தீவிர கண்காணிப்பை அதிகரித்துள்ளது. இந்நிலையில் கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலி விமானத் தளத்தில் இந்திய இராணுவத்தின் சென்னை கேந்திரத்தைச் சேர்ந்த 5 இராணுவ வாகனங்கள் ராடர் இயந்திரம் பொருத்தப்பட்டு கடந்த ஒரு வார காலமாக இயங்கி வருகின்றன என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இராமேஸ்வரம் கடற்பரப்பில் 4 போர்க் கப்பல்கள் ரோந்து

இராமேஸ்வரம் கடற்பிரதேசம் ஊடாக இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாக வெளிவந்த தகவல்களினையடுத்து இந்தியக் கரையோரப் பிரதேசங்களில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இராமேஸ்வரம் கடற்பரப்பில் 4 போர்க் கப்பல்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடுக்கடலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பாதுகாப்புப் படையினர் இராமேஸ்வரம் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல்கள் கொடுத்து வருவதாக இந்தியத் தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை விடுதலைப் புலிகளின் விமானம் குறித்தும் இக் கப்பல்கள் அவதானித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-3)

## ஓமந்தைச் சோதனைச் சாவடியைத் திறப்பதற்கு திகதி எதுவும் இன்னமும் குறிப்பிடப்படவில்லை

### செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

(வவுனியா)

ஓமந்தை சோதனைச் சாவடியைத் திறப்பதற்கான திகதியை தற்போது உறுதியாகக் கூற முடியாது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் டுவன்ற கூட் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளை அவர் நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார். இதன்பின்னர் ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக வவுனியாவுக்கு வந்த அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்த விடயங்களை அரசாங்கப் பிரதிநிதிகளுக்குச் சமர்ப்பித்த பின்னர் ஓமந்தைச் சோதனைச் சாவடியைத் திறப்பதற்கான இறுதித் திகதியை நிர்ணயிக்க முடியும் என அவர் கூறினார்.

இதேவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லால் செஸ்பேர்க்கின் நேற்றைய கிளிநொச்சி விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

ஓமந்தைச் சோதனைச் சாவடி மூடப்பட்டிருப்பதனால் இவ் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாகக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓர்மசன் தெரிவித்தார். (ச-3)

## இராணுவத்துடனான தாக்குதலில் 12 விடுதலைப்புலிகள் உயிரிழப்பு

### தேசிய ஊடக மையம் செய்தி

(கொழும்பு)

கடந்த 36 மணிநேரத்தில் இரண்டு வெவ்வேறான சம்பவங்களில் 12 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் நேற்றுத் தெரிவித்தது.

ஓமந்தை வடமேற்குப் பிரதேசம் மற்றும் வவுனியா, மன்னார் பாதுகாப்பு முன்னரங்கு ஆகிய இடங்களில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதல்களின்போதே இவர்கள் பலியாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் நடத்திய வெற்றிகரமான தாக்குதலில் முதலில் 10 புலிகள் கொல்லப்பட்டனர். மற்றொரு தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை வவுனியா திருவகம கிராமத்தின் பாதுகாப்புச் சாவடி மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் அதிகாலை 1.45 மணியளவில் நடத்திய தாக்குதலை ஊர்காவற்படையினர் முறியடித்து பதில் தாக்குதல் நடத்தினர் என ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## பழங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழவியாபார கடைகளின் மீது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடாத்திய திடீர் பரிசோதனையின் போது சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் 12 கடைகளில் மருந்தூட்டப்பட்ட நிலையில் விற்பனை செய்யப்பட்ட பழங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை அவர்களின் சம்மதத்துடன் இனிவரும் காலங்களில் இவ்வாறு இடம் பெறக் கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்டு அழிக்கப்பட்டதாக யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ச)

## விடுதலைப்...

புலிகளின் மூன்று உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் இதில் பிராந்தியத்திற்குப் பொறுப்பான உறுப்பினர் ஒருவரும் அடங்குவதாகப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் குறித்துத் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ச-3)

## யுத்த நிறுத்தத்தை அமுல்...

அமைச்சர் கொலித் தோமஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதன் மூலம் உயிரிழப்புக்களைத் தடுக்க முடியும். துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுக்குப் பதிலாக சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றுவதற்கு சாதகமான சூழ்நிலை ஏற்படும் என இடம்பெயர்ந்த மக்கள் கருதுகின்றனர்.

பிரிட்டன் வழங்கும் இந்நிதி செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் தொண்டர் அமைப்புக்கள் ஊடாக வழங்கப்படும்.

இந்நிதியில் ஒரு தொகை வடக்கு, கிழக்கு உட்பட ஏனைய இடங்களில் கடமை புரியும் தொண்டர் அமைப்பு உத்தியோகஸ்தர்களால் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஒதுக்கப்படும் என்றார்.

இதேவேளை இலங்கைக்கு பிரிட்டன் வழங்கிய நிதியுதவியை கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் டொமினிக் கிலிகொட் வரவேற்றுள்ளார். (ச)

## நாடாளுமன்ற...

எங்கே? அதற்குரிய உரிமையாளர் யார்?

வெளியில் கூறப்படாத இதற்கான பணப் பரிமாற்றத்தில் சிலர் பலனடைந்துள்ளனர். குளோபல் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு விற்கப்பட்ட பங்குகளில் தொலைக்காட்சிகளுக்கான அனுமதிப் பத்திரம், வானொலி ஒலிபரப்பு என்பனவும் அடங்கும்.

இந்த நிறுவனம் வேறு பெயரில் ஏற்கனவே ரெலிக்கொம் நிறுவனத்தின் 8 வீதமான பங்குகளை வழங்கியுள்ளது. எனவே தற்போது கொள்வனவு செய்யப்படும் 25 வீதமான பங்குகளுடன் அதன் மொத்தப் பங்குகள் 33 வீதமாகும்.

தற்போது சிறிலங்கா ரெலிக்கொம்மின் பங்குகள் 40 ரூபாவினால் அதிகரித்துள்ளன. எனினும் இது தொடர்பான விவாதத்திற்கு எதிர்க்கட்சி அனுமதி கோரியதைத் தொடர்ந்து அதற்கான அனுமதி எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ச-5)

## புலிகளுக்கு ஆதரவானோருடன் சந்திரிகா பேசவில்லை!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான எந்தத் தரப்பினருடனும் பேச்சுக்களில் ஈடுபடவில்லை என அவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரித்தானியாவின் தொழிற்கட்சியில் அங்கம் வகிக்கும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் பேச்சுக்களில் ஈடுபட்டதாக அண்மையில் பலசெய்திகள் வெளிவந்துள்ளதாக சந்திரிகா குமாரதுங்கவின் செயலாளர் பியசேன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் ஜனாதிபதியுடன் பேச்சுக்களில் கலந்து கொள்ள பல வாய்ப்புக்களை கேட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-3)

## சகல வெளிமாவட்ட ஆசிரியர்...

தங்கியுள்ள இடங்களில் தற்காலிக இணைப்பு வழங்குமாறு கல்வி அமைச்சு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிவித்திருந்தது.

எனினும் யாழ்.மாவட்டத்தில் முழுமையாக அந் நியமனம் வழங்கப்படாத நிலையில் தற்காலிக இணைப்புப் பெறாத ஆசிரியர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கடந்த 19 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையூடாகக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா அறிவித்திருந்தார்.

தம்முடன் தொடர்பு கொள்ள ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்களை வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்குமாறு நேற்றுத் தாம் அறிவுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் ஆகிய ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குத் தாம் இவ்வறிவித்தலை எழுத்து மூலம் அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இனி தற்காலிக இணைப்பு வழங்கக் கோரி தம்முடன் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை எனவும் தமது பிரதேச வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தமது தற்காலிக இணைப்பைப்பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா வலம்புரிக்குத் தெரிவித்தார். (ச-5)

## அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்...

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள போர்ச் சூழ்நிலை ஓர் கஷ்டமான நிலை என அமெரிக்கா உணர்கின்றது.

எனவே இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஓர் அதிகாரப் பரவலாக்கல் மூலம் சமாதானப் பேச்சை ஆரம்பித்து மக்களுக்குச் சமாதானத்தை பெற்றுக் கொடுப்பது கட்டாயமானதாகும். இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் மற்றும் நோர்வேயுடன் இணைந்து அமெரிக்கா இலங்கையில் சமாதானத் தீர்வொன்று ஏற்படத் தொடர்ந்து ஆதரவு வழங்கும்.

போரில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசு - விடுதலைப்புலிகளுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இலங்கையில் தற்போது நிலவும் நிலைமை ஒரு கஷ்டமானதாகும். எனவே ஓர்அதிகாரப் பரவலாக்கல் மூலம் சமாதானத் தீர்வை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்புங்கள் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் பௌச்சர், அரச பிரதிநிதிகளையும் மற்றும் பல்வேறு சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடிய போது, அதிகாரப் பரவலாக்கல் மூலம் இரு தரப்பும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும் என வலியுறுத்தியிருந்தார் என்றார்.

இலங்கை அரசு அமெரிக்காவின் ஏதாவது உதவிகளைக் கோரியுள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு பதிலளித்த டொம் ஹசி, இல்லை இராணுவத் தலையீடோ அமைதிப் படை அமைப்பது பற்றியோ வேண்டுகோள் எதனையும் இலங்கை அரசு விடவில்லை.

எனவே இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்பி ஓர் அதிகாரப் பரவலாக்கல் ஒழுங்கை மேற்கொண்டு அதன் மூலம் சமாதானத் தீர்வொன்றை இலங்கை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பது கட்டாயமானது என அமெரிக்கா வலியுறுத்துவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உதவிப் பேச்சாளர் டொம் ஹசி தெரிவித்தார். (ச-3,5)

## எத்தனை மிக் விமானங்களை...

போர் விமானங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகளால் சம்பந்தப்பட்டவர்களுக்கு கமிஷன் அதிகம் கிடைக்க வாய்ப்புண்டு.

இன்று ஜே.வி.பி. ரெலிக்கொம் விற்பனை பற்றி அதிகம் பேசுகின்றது. ஆனால் யுத்தக் கருவிகள் கொள்வனவு பற்றி மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றது. இது ஏன்? உண்மையில் ஜே.வி.பி. அங்கம் வகிக்கும் தேச விதேசி என்ற அமைப்புக்குப் போர்த் தளபாடங்கள் கொள்வனவில் பெறப்படும் கமிஷனில் ஒருபகுதி போகின்றது.

அரசு சார்பற்றது போல் இயங்கும் இந்த அமைப்புக்கு இவ்வாறாக பெருமளவு நிதி வருகின்றது.

எனவே மக்கள் பணத்தில் தங் களின் நலனுக்காக பெருமளவு ஆயுதங்க ளைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து விட்டு உண்மையான சமாதானத்தை நோக் கிப் பயணிக்க வேண்டும். (ச-5)

## இந்தியாவிலுள்ள இலங்கை...

உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை முன்வைத்து இவ் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இதனால் பிரஜா உரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

யோசனைகள் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரட்நாயக்க தெரிவித்தார்.

அரசியல் தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே இந்தியாவிலுள்ள அனைத்து அகதிகளையும் இலங்கைக்கு அழைத்து வர முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார். (ச-3)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.